**சுருக்கம்**

ஆட்சி எல்லை – நாமக்கல் மாவட்டம் – நாமக்கல் மற்றும் இராசிபுரம் வட்டங்களை சீரமைத்து செம்மேடு என்ற இடத்தை தலைமையிடமாகக் கொண்டு புதியதாக கொல்லிமலை வட்டம் உருவாக்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**வருவாய் [வ.நி.1 (1)] துறை**

**அரசாணை (நிலை) எண்.229** **நாள் : 20.06.2012.**

**படிக்கவும்:**

(1) அரசாணை (நிலை) எண்.279, வருவாய்த்துறை, நாள் 09.06.2003
(2) நாமக்கல் மாவட்ட ஆட்சியர் கடித எண்.27816/2007/ஓ3, நாள் 30.05.2008 மற்றும் 26.06.2009
(3) முதன்மைச் செயலாளர் / வருவாய் நில நிருவாக ஆணையரின் கடித எண். பணி 6(4)/45058/2007, நாள் 28.06.2009

**ஆணை:–**

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள நாமக்கல் மற்றும் இராசிபுரம் வட்டங்களைச் சீரமைத்து செம்மேடு என்ற இடத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய கொல்லிமலை வட்டத்தினை உருவாக்குவது தொடர்பாக பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் கண்டுள்ள நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிக்கையின் அடிப்படையில், பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் கீழ்க்கண்டவாறு அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

(i) நாமக்கல் வட்டத்திலிருந்து கொல்லிமலை சுமார் 50 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. கொல்லிமலையில் வசிக்கும் மக்கள் பெரும்பாலும் பழங்குடியினர் ஆவர். இவர்களின் குழந்தைகளுக்கு சாதிச்சான்று, வருமானச் சான்று மற்றும் இருப்பிடச் சான்று ஆகியவற்றைப் பெறவும், முதியோர் உதவித் தொகை, நலிவுற்றோர் நிவாரணத் தொகை மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டம் உள்ளிட்ட தமிழக அரசால் சிறப்பாக செயல்படுத்தப்பட்டுவரும் அனைத்து பயன்களையும் பெற மேற்படி கொல்லிமலைப் பகுதியில் வாழும் மக்கள் சுமார் 50 கி.மீ. தொலைவில் உள்ள நாமக்கல் வட்ட அலுவலகத்திற்கும், இராசிபுரம் வட்ட அலுவலகத்திற்கும் செல்ல வேண்டியுள்ளது. இதனால், சமுதாயத்தில் மிகவும் பின் தங்கியுள்ள இம்மக்களுக்குத் தேவையற்ற காலவிரையமும், பண விரையமும் ஏற்படுவதுடன் மிகுந்த சிரமத்திற்கும் ஆளாகிறார்கள். கொல்லிமலையில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், காவல் ஆய்வாளர் அலுவலகம், வனச்சரக அலுவலகம், ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இந்தியன் வங்கி உள்ளிட்ட முக்கிய அரசு அலுவலகங்கள் இயங்கி வரும் நிலையில், இம்மக்களின் துயர்துடைக்க இந்நேர்வினை சிறப்பினமாகக் கருதி, கொல்லிமலையில் நாமக்கல் வட்டத்திற்குட்பட்ட 7 வருவாய் கிராமங்களையும் இராசிபுரம் வட்டத்திற்குட்பட்ட 7 வருவாய் கிராமங்களையும் பிரித்து 14 வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய கொல்லிமலைப் பகுதியினை தனி வட்டமாக அமைப்பது மிகவும் அவசியம் ஆகும்.

(ii) கொல்லிமலைப் பகுதியானது, கடல் மட்டத்திலிருந்து 1356 மீட்டர் உயரம் கொண்ட மலைப்பகுதியாகும். இம்மலைப்பகுதியில் இயற்கை வளங்களும், பாக்சைட் கனிமம் மற்றும் கிரானைட் கனிமமும் உள்ளது. நாமக்கல் வட்டத்தில் 15 குக்கிராமங்களும், இராசிபுரம் வட்டத்தில் 13 குக்கிராமங்களையும் கொண்டு,

(த.பி.பா)

அரசாணை (நிலை) எண்.49 வருவாய், நாள் 24.3.2003–ன்படி இப்பகுதி மலைப்பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(iii) கொல்லிமலைப்பகுதி நாமக்கல் வட்டத்திற்குட்பட்ட 7 கிராமங்கள் அடங்கிய வாழவந்திநாடு உள்வட்டமும், இராசிபுரம் வட்டத்திற்குட்பட்ட 9 கிராமங்கள் அடங்கிய திருப்புளி நாடு உள்வட்டத்தையும் சேர்த்து 16 கிராமங்கள் அடங்கிய பகுதியாகும். எனவே, கொல்லிமலை வட்டத்திலுள்ள செம்மேடு என்ற இடத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், பயணியர் விடுதி, ஆரம்ப சுகாதார நிலையம், வங்கிகள், புதிய பேருந்துநிலையம் மற்றும் காவல் ஆய்வாளர் அலுவலகம் ஆகியன அமைந்துள்ளதால், "செம்மேடு" என்ற இடத்தினை கொல்லிமலை வட்டத்தின் தலைமையிடமாக அமைக்கலாம்.

(iv) நாமக்கல் மாவட்டம், நாமக்கல் மற்றும் இராசிபுரம் வட்டங்களைச் சீரமைத்து செம்மேடு தலைநகராகக் கொண்ட கொல்லிமலை வட்டம் அமைக்கப்படும்போது, கொல்லிமலை வட்டம் 205.74 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 36,525 மக்கள் தொகையையும், வாழவந்திநாடு மற்றும் திருப்புளிநாடு ஆகிய இரண்டு உள்வட்டங்களையும், 16 வருவாய் கிராமங்களையும் கொண்டதாகக் கொல்லிமலை வட்டம் அமையும்.

(v) புதிய கொல்லிமலை வட்டத்திற்கு, 12 பணியிடங்களை நாமக்கல் மற்றும் இராசிபுரம் வட்டங்களிலிருந்து மறுபணிபரவலமர்த்தல் மூலமும், (Redeployment) 12 பணியிடங்களை புதியதாகத் தோற்றுவித்தும், ஆக மொத்தம் 24 பணியிடங்கள் வழங்கலாம். இதனால் பணியாளர்களின் ஊதியம் தொடர் செலவினமாக ஆண்டொன்றிற்கு ரூ.70,68,000/– (ரூபாய் எழுபது லட்சத்து அறுபத்தெட்டாயிரம் மட்டும்) ஆகும்.

(vi) மேலும், இரண்டு உள்வட்டங்கள் கொண்ட வட்டங்களுக்கு Standard Staff Pattern–ன்படி 23 பணியிடங்கள் மட்டுமே அனுமதிக்க வேண்டிய நிலையில், மலைப்பகுதியைக் கருத்தில் கொண்டும், உத்தேசிக்கப்பட்ட கொல்லிமலை வட்டத்தின் பரப்பளவு 205.74 சதுர கிலோ மீட்டர் என்பதாலும், ஒரு மண்டல துணை வட்டாட்சியர் பணியிடம் கூடுதலாக ஏற்படுத்த அனுமதிக்கலாம், மற்றும் நாமக்கல் வட்டத்திலிருந்து கொல்லிமலை வட்டத்திற்கு 7 கிராமங்கள் இணைக்கப்படுவதால், 7 கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களையும், இராசிபுரம் வட்டத்திலிருந்து 9 கிராமங்கள் இணைக்கப்படுவதால் 9 கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்களையும் சம்பந்தப்பட்ட வட்டங்களில் இருந்து மாற்றம் செய்யலாம்.

(vii) புதியதாக உருவாக்க உத்தேசிக்கப் பட்டுள்ள கொல்லிமலை வட்டத்திற்கு பணியாளர் ஊதியம் உள்பட எரிபொருள், மின்சாரக்கட்டணம் தொலைபேசிக்கட்டணம் மற்றும் சில்லறைச் செலவினம் ஆகியவற்றிற்கு தொடர் செலவினமாக ஆண்டொண்டிற்கு ரூ.75,01,340/–ம் மற்றும் தொடராச் செலவினமாக ரூ.2,91,03,000/–ம் ஒப்பளிப்பு வழங்க முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அனுமதி கோரியுள்ளார்.

2. முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மேலும் தனது அறிக்கையில், உத்தேசிக்கப்பட்ட கொல்லிமலை வட்டம் அரசாணை எண்.279, வருவாய்த்துறை, நாள் 9.6.2003–ல் அரசு நிர்ணயித்துள்ள அளவுகோல்களைப் பூர்த்தி செய்யவில்லை என்றும் இருப்பினும், மேற்படி அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல் மலைப்பகுதிகள், சென்னை போன்ற பெருநகரங்கள் ஆகியவற்றிற்கு பொருந்தாது எனத் தெரிவிக்கப்பட்டிருப்பதால், கொல்லிமலைப் பகுதியில் வசிக்கும் பொது மக்களின் நலனையும், நிர்வாக நலனையும் கருத்தில் கொண்டு, நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையை ஏற்று, நாமக்கல் மற்றும் இராசிபுரம் வட்டங்களின்

எல்லைகளைச் சீரமைத்து கீழே குறிப்பிட்டுள்ளபடி செம்மேடு என்ற இடத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய கொல்லிமலை வட்டம் அமைக்கலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

| வ.எண் | வட்டம் | | குறுவட்டம் |
|---|---|---|---|
| 1. | நாமக்கல் | 1 | சேந்தமங்கலம் |
| | | 2 | செல்லப்பம்பட்டி |
| | | 3 | புதுச்சத்திரம் |
| | | 4 | காளப்பநாயக்கன்பட்டி |
| | | 5 | மோகனூர் |
| | | 6 | நாமக்கல் |
| | | 7 | வளையப்பட்டி |
| | | 8 | எருமப்பட்டி |
| | | 9 | அலங்காநத்தம் |
| | | 10 | நல்லிப்பாளையம் |
| 2. | இராசிபுரம் | 1 | இராசிபுரம் |
| | | 2 | வெண்ணந்தூர் |
| | | 3 | மங்கலபுரம் |
| | | 4 | நாமகிரிப்பேட்டை |
| | | 5 | முள்ளுக்குறிச்சி |
| 3. | கொல்லிமலை | 1 | வாழவந்திநாடு (நாமக்கல் வட்டத்திலிருந்து பிரித்து) |
| | | 2 | திருப்புளிநாடு (இராசிபுரம் வட்டத்திலிருந்து பிரித்து) |

புதிய கொல்லிமலை வட்டத்தில் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ள கிராமங்களின் விவரங்கள்:—

| வ.எண் | உள்வட்டத்தில் பெயர் | கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | வாழவந்திநாடு | குண்டூர் நாடு |
| | | வளப்பூர்நாடு |
| | | அரியூர்நாடு |
| | | வாழவந்திநாடு |
| | | திண்ணனூர்நாடு |
| | | தேவனூர் நாடு |
| | | சேலூர்நாடு |

(த.பி.பா)

| வ.எண் | உள்வட்டத்தில் பெயர் | கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 2. | திருப்புளிநாடு | பெரக்கரைநாடு |
| | | பைல்நாடு |
| | | எடப்புளிநாடு |
| | | சித்தூர்நாடு |
| | | திருப்புளிநாடு |
| | | பலாப்பாடிநாடு |
| | | ஆலந்தூர்நாடு |
| | | குண்டுனிநாடு |
| | | அடக்கம்புதுக்கோம்பை |

**3.** மேற்கூறிய சூழ்நிலையில், கொல்லிமலைப் பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், நிர்வாக நலனைக் கருத்தில் கொண்டும் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் மற்றும் முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் ஆகியோரின் பரிந்துரைகளை ஏற்று கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

(i) நாமக்கல் மாவட்டத்திற்குட்பட்ட நாமக்கல் மற்றும் இராசிபுரம் வட்டங்களைச் சீரமைத்து வாழவந்திநாடு மற்றும் திருப்புளிநாடு ஆகிய இரண்டு குறு வட்டங்களை இணைத்து செம்மேடு என்ற இடத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதியதாக கொல்லிமலை வட்டம் உருவாக்கப்படுகிறது.

(ii) புதியதாக தோற்றுவிக்கப்படும் கொல்லிமலை வட்டத்தில் கீழ்க்கண்ட கிராமங்களை இணைக்கலாம்.

| வ.எண் | உள்வட்டத்தில் பெயர் | கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | வாழவந்திநாடு | குண்டூர் நாடு |
| | | வளப்பூர்நாடு |
| | | அரியூர்நாடு |
| | | வாழவந்திநாடு |
| | | திண்ணனூர்நாடு |
| | | தேவனூர் நாடு |
| | | சேலூர்நாடு |
| 2. | திருப்புளிநாடு | பெரக்கரைநாடு |
| | | பைல்நாடு |
| | | எடப்புளிநாடு |
| | | சித்தூர்நாடு |
| | | திருப்புளிநாடு |
| | | பலாப்பாடிநாடு |
| | | ஆலந்தூர்நாடு |
| | | குண்டுனிநாடு |
| | | அடக்கம்புதுக்கோம்பை |

(iii) புதியதாக அமையவுள்ள கொல்லிமலை வட்டத்திற்கு கீழ்க்கண்ட 12 பணியிடங்கள் தற்போதைய நாமக்கல் மற்றும் இராசிபுரம் வட்டங்களிலிருந்து மறுபணி பரவலமர்த்தல் (Redeployment) முறையிலும், 12 பணியிடங்கள் புதியதாகக் தோற்றுவித்தும், ஆக மொத்தம் 24 பணியிடங்கள் வழங்கப்படுகிறது.

**நாமக்கல் வட்டத்திலிருந்து மறுபணி பரவலமர்த்தல் மூலம் (Redeployment) கொல்லிமலை வட்டத்திற்கு மாற்றம் செய்யப்படவேண்டிய பணியிடங்கள்**

| வ.எண். | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உதவியாளர்<br>(வருவாய் ஆய்வர் உட்பட) | 3 |
| 2. | இளநிலை உதவியாளர் | 1 |
| 3. | குறுவட்ட அளவர் | 1 |
| | மொத்தம் | 5 |

**இராசிபுரம் வட்டத்திலிருந்து மறுபணி பரவலமர்த்தல் மூலம் (Redeployment) கொல்லிமலை வட்டத்திற்கு மாற்றம் செய்யப்படவேண்டிய பணியிடங்கள்**

| வ.எண். | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உதவியாளர்<br>(வருவாய் ஆய்வர் உட்பட) | 2 |
| 2. | இளநிலை உதவியாளர் | 1 |
| 3. | அலுவலக உதவியாளர் | 3 |
| 4. | குறுவட்ட அளவர் | 1 |
| | மொத்தம் | 7 |

**கொல்லிமலை வட்டத்திற்கு புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்கள்**

| வ. எண். | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | வட்டாட்சியர் | 1 |
| 2. | தலைமையிடத்து<br>துணை வட்டாட்சியர் | 1 |
| 3. | மண்டல துணை வட்டாட்சியர் | 1 |
| 4. | தட்டச்சர் | 1 |
| 5. | ஈப்பு ஓட்டுநர் | 1 |
| 6. | பதிவறை எழுத்தர் | 1 |
| 7. | இரவுக் காவலர் | 1 |

(த.பி.பா)

| வ. எண். | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| | <u>குடிமைப்பொருள் பிரிவு</u> | |
| 8. | வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர் நிலை) | 1 |
| 9. | தனிவருவாய் ஆய்வாளர் | 1 |
| | <u>நில அளவைப் பிரிவு</u> | |
| 10. | வட்ட துணை ஆய்வாளர் | 1 |
| 11. | முதுநிலை வரைவளார் | 1 |
| 12. | புல உதவியாளர் | 1 |
| | **மொத்தம்** | 12 |

(iv) நாமக்கல் மற்றும் இராசிபுரம் வட்டங்களிலிருந்து மாற்றப்படும் பணியாளர்களுடன் தளவாடங்கள் மற்றும் இதர பொருட்களை மாற்றுவது தொடர்பாக நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தேவையின் அடிப்படையைக் கருத்தில் கொண்டு உரிய முடிவுகளை மேற்கொள்ளலாம்.

(v) கொல்லிமலை வட்டத்திற்கு இரண்டு ஈப்புகள் வாங்க தொடராச் செலவினமாக ரூ.10.00 இலட்சமும் (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) அதற்கு ஆண்டொன்றிற்கு ஆகும் எரிபொருள் செலவினங்களுக்காக ரூ.1.48 இலட்சமும் (ரூபாய் ஒரு லட்சத்து நாற்பத்தெட்டாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

(vi) கொல்லிமலை வட்டத்திற்கு தளவாடங்கள் வாங்க தொடராச் செலவினமாக ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

(vii) கொல்லிமலை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு தொலைப்பேசி அமைப்பதற்கு வைப்புத்தொகையாக ரூ.3,000/– ம் அதற்கு ஆண்டொன்றுக்கு ஆகும் தொலைப்பேசி கட்டணம் ரூ.25,500/– க்கு (மாதம் ஒன்றிற்கு ரூ.1,250/– வீதம்) ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

(viii) கொல்லிமலை வட்டத்திற்கு புதிய அலுவலகக் கட்டிடம் கட்டும் வரை, அரசு கட்டடங்கள் ஏதும் இல்லாத நிலையில் வாடகை செலவினத்திற்காக, நடப்பு நிதியாண்டிற்கு முதற்கண் தோராயமாக ரூ.80,000/– ம் எதிர்பாரா செலவினங்களுக்காக ரூ.1,20,000 ம் ஆக மொத்தம் ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) க்கு ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

(ix) கொல்லிமலை வட்டத்திற்கு கணினிகள் வாங்குவதற்காக ரூ.3,50,000/– ம் (1 Server with 4 Clients, Printers, Modem, (UPS, Table, Accessories) ஜெராக்ஸ் இயந்திரம் வாங்க ரூ.75,000/– ம், ஃபேக்ஸ் இயந்திரம் வாங்க ரூ.15,000/– ம் கணினி அறைக்காக குளிர்சாதனம் வாங்க ரூ.50,000/– ம் மற்றும் தீயணைப்புக் கருவி வாங்க ரூ.10,000/– ம் ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

(x) கொல்லிமலை வட்டத்திற்கு மின்கட்டண செலவினங்களுக்காக ஆண்டொன்றிற்கு ரூ.60,000/– ம் (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(த.பி.பா)

(xi) கொல்லிமலை வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்பு கட்டுவதற்காக **ரூ.2,66,00,000/–** க்கு (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்தாறு இலட்சம் மட்டும்) நிருவாக அனுமதியும், **ரூ.53,20,000/–** (ரூபாய் ஐம்பத்து மூன்று இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பும் வழங்கப்படுகிறது.

**4.** மேற்கூறிய செலவினங்கள் பின்வரும் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்படும்.

**(அ) பணியாளர் நியமனம்**

**(1) வருவாய் பணியிடங்கள்:–**

**2053–00–**மாவட்ட நிருவாகம் **– 094** ஏனைய பணியாளரமைப்பு–I திட்டத்தில் சேராதது AB – வட்டப்பணியாளரமைப்புகள் **–01** சம்பளங்கள்

(த.தொ.கு: 2053-00-094-AB-0102)

**(2) நில அளவைப் பணியிடங்கள்:–**

**2029–00–**நில வருவாய் **– 102** நில அளவை நிலவரி ஏற்பாட்டுப்பணிகள்–I திட்டத்தில் சேராதது AE– மத்திய நில அளவை அலுவலகம் **–01** சம்பளங்கள்

(த.தொ.கு: 2029-00-102-AE-0107)

**(3) குடிமைப் பொருள் பணியிடங்கள்:–**

**3456–00–**நுகர்பொருள் வழங்கல் **– 001** நெறிப்படுத்துதலும் நிருவாகமும்–I திட்டத்தில் சேராதது AB– மாவட்டப் பணியாளர் அமைப்பு **–01** சம்பளங்கள்

(த.தொ.கு: 3456-00-001-AB-0108)

**(ஆ) தொலைப்பேசி:– ரூ.28,500/–**

**2053–00–094–**AB-05 அலுவலகச் செலவுகள்**–01** தொலைப்பேசிக் கட்டணங்கள்

(த.தொ.கு: 2053-00-094-AB-0513)

**(இ) அறைக்கலன்:– ரூ.10,00,000/–**

**2053–00–094–**AB-05 அலுவலகச் செலவுகள்**–05** அறைக்கலன்

(த.தொ.கு: 2053-00-094-AB-0559)

**(ஈ) ஈப்பு:– ரூ.10,00,000/–**

**2053–00–094–**AB-21 மோட்டார் வண்டிகள்**–01** வாங்குதல்

(த.தொ.கு: 2053-00-094-AB-2119)

**(உ) எரிபொருள்:– ரூ.1,48,000/–**

**2053–00–094–**AB-45 பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசக்கெண்ணெய்

(த.தொ.கு: 2053-00-094-AB-4500)

(த.பி.பா)

**(ஊ) கட்டட வாடகை:– ரூ.80,000/–**

2053–00–094–AB-06 வாடகை கட்டணம் மற்றும் வரிகள்–01 வாடகை

(து.தொ.கு: 2053-00-094-AB-0611)

**(எ) எதிர்பாரா செலவினம்:– ரூ.1,20,000/–**

2053–00–094–AB-05 அலுவலகச் செலவுகள் – 02 ஏனைய சில்லரைச் செலவுகள்

(து.தொ.கு: 2053-00-094-AB-0522)

**(ஏ) கணினியும் துணைப்பாகங்களும்:– ரூ.3,50,000/–**

2053–00–094–AB-76 கணினியும் துணைப்பாகங்களும்–01 வாங்குதல்

(து.தொ.கு: 2053-00-094-AB-7614)

**(ஐ) ஜெராக்ஸ் இயந்திரம், ஃபேக்ஸ் இயந்திரம் மற்றும் தீயணைப்பு கருவி, குளிர்ச்சாதனம்:– ரூ.1,50,000/–**

2053–00–094–AB-19 இயந்திரம் சாதனமும்–01 வாங்குதல்

(து.தொ.கு: 2053-00-094-AB-1914)

**(ஒ) வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர்கள் குடியிருப்பு:– ரூ.53,20,000/– (ரூபாய் ஐம்பத்து மூன்று லட்சத்து இருபதாயிரம் மட்டும்)**

4059– பொதுப்பணிகள் குறித்த மூலதனச்செலவு–01 அலுவலகக் கட்டடங்கள்–051 கட்டுமானம்– பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப்பணிகள்–II மாநிலத் திட்டம்– JC நிலவரி–16 பெரும்பணிகள்

(து.தொ.கு: 4059-01-051-JC-1609)

**5.** மேலே பத்தி **3** இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள செலவினம் ஒரு புதுப்பணியாகும் (New Services), இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.I) துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.செ.I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–**5** அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை துணை மானிய கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும் பொருட்டு, வரைவு விளக்கக்குறிப்பினை உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொ.I) துறைக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**6.** இவ்வரசாணையினை உடன் செயல்படுத்த தக்க மேல்நடவடிக்கை எடுக்குமாறு முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சியர் நாமக்கல் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் ஆணையினை செயல்படுத்தியதற்கான அறிக்கையை அரசுக்கு அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(த.பி.பா)

7. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.34412/நிதி/சி.எம்.ப்பி.சி/2012, நாள் 18.06.2012 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.428 (நானூற்று இருபத்தி எட்டு) இசைவுடன் வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

**ரமேஷ்ராம் மிஸ்ரா**
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**
பணி மேலாளர்,
அரசு மைய அச்சகம், சென்னை – 600 079 (01.08.2012 ஆம் நாளிட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிடுவதற்காக)
முதன்மைச் செயலாளர் /
வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5
முதன்மைச் செயலாளர் /
நில நிர்வாக ஆணையர், சென்னை –5
முதன்மைச் செயலர் /
நிலச் சீர்திருத்த ஆணையர், சென்னை–5
குடிமைப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர், சென்னை–5
ஆணையர் மற்றும் இயக்குநர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சென்னை–5
மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல் மாவட்டம்
கருவூல அலுவலர், நாமக்கல் மாவட்டம்
மாநில கணக்காயர் (A&E), சென்னை–18 (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18 (பெயரிட்ட உறையில்)
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை–18
இயக்குநர், எழுதுபொருள் அச்சுத்துறை, சென்னை–2
அனைத்துத் துறை தலைவர்கள்
இயக்குநர், தகவல் மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை–9
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–104
முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறை, சென்னை–9
முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–9

**நகல்**
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9
வருவாய்த்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
வருவாய்த்துறை முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
நிதி (வ.செ/பொது–I /பொது– II / CMPC) துறை, சென்னை–9
சட்ட அலுவலர் (கணக்கெடுப்பு), பொதுத்துறை, சென்னை–9
அனைத்துப் பிரிவுகள், வருவாய்த்துறை, சென்னை–9 (தக்க நடவடிக்கைக்காக)
இகோ / உதிரி –2

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலகர்

**<u>இணைப்பு – I</u>**

**<u>அரசாணை (நிலை) எண்.229, வருவாய், நாள் 20.06.2012</u>**

**<u>அறிவிக்கை</u>**

தமிழ்நாடு அரசு இதனால் அறிவிப்பது யாதெனில், நாமக்கல் மாவட்டத்திற்குட்பட்ட நாமக்கல் மற்றும் ராசிபுரம் வட்டங்களைச் சீரமைத்து வாழவந்திநாடு மற்றும் திருப்புளிநாடு ஆகிய இரண்டு குறுவட்டங்களை இணைத்து செம்மேடு என்ற இடத்தை தலையிடமாகக் கொண்டு புதிய கொல்லிமலை வட்டம் 2012 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 1 ஆம் நாளிலிருந்து கீழ்க்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கிராமங்களை தனது ஆட்சி எல்லைகளாகக் கொண்டு செயல்படும்.

2. புதிதாக உருவாக்கப்படும் கொல்லிமலை வட்டத்தில் உள்ளடங்கும் வாழவந்திநாடு மற்றும் திருப்புளிநாடு ஆகிய இரண்டு குறுவட்டங்கள் மீது தற்போது நாமக்கல் மற்றும் ராசிபுரம் வட்டாட்சியரால் கையாளப்படும் அதிகாரங்கள் இனி கொல்லிமலை வட்டாட்சியரால் 2012 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 1 ஆம் நாளிலிருந்து கையாளப்படும்

**<u>அட்டவணை</u>**

| வ.எண் | உள்வட்டத்தில் பெயர் | கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | வாழவந்திநாடு (நாமக்கல் வட்டத்திலிருந்து பிரித்து) | குண்டூர் நாடு |
| | | வளப்பூர்நாடு |
| | | அரியூர்நாடு |
| | | வாழவந்திநாடு |
| | | திண்ணனூர்நாடு |
| | | தேவனூர் நாடு |
| | | சேலூர்நாடு |
| 2. | திருப்புளிநாடு (இராசிபுரம் வட்டத்திலிருந்து பிரித்து) | பெரக்கரைநாடு |
| | | பைல்நாடு |
| | | எடப்புளிநாடு |
| | | சித்தூர்நாடு |
| | | திருப்புளிநாடு |

| வ.எண் | உள்வட்டத்தில் பெயர் | கிராமத்தின் பெயர் |
|---|---|---|
| | | பலாப்பாடிநாடு |
| | | ஆலந்தூர்நாடு |
| | | குண்டுனிநாடு |
| | | அடக்கம்புதுக்கோம்பை |

**ரமேஷ்ராம் மிஸ்ரா**
அரசு முதன்மைச் செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்